முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 185/2020

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 04 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காந்திமதி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சேகர் | கிராமம் | : திருப்பூர் |
| வயது | : 57 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 04-03-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. ராஜமாணிக்கம், மாணிக்கம்மாள் என் பெற்றோர்கள் என்ன வேலை செய்து வந்தார்கள் என்றால் என் அப்பா கம்பெனியில் கட்டிங் மாஸ்டர் ஆக வேலை பார்த்து வந்தார். என் தாயார் டீக்கடை வைத்து நடத்தி வந்தார். எங்களுக்கு அனுப்பர்பாளையம் பெரியார் காலனி, முத்துகோபால் நகரில் வீடு இருந்தது என்றால் சரிதான். அங்கு தான் நானும் என் உடன் பிறந்தர்களும் கூட்டுக் குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். அங்கேரிபாளையத்தில் வீடு இருந்தது. அங்கேயும் இருந்தோம். அங்கேரிபாளையத்தில் உள்ள வீடு யாருடையது என்றால் என் அப்பா உடையது.

2. எனக்கு எப்போது திருமணமானது என்றால் கடந்த 1988 ம் ஆண்டு திருமணமானது. திருமணத்திற்கு பின்னிட்டு நான் என் கணவர் வீட்டுக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். பாலசுப்பிரமணியத்திற்கு எப்போது திருமணமானது என்றால் என் அப்பா காலமான பின்னிட்டு நடந்தது. சிவானந்தகுமாருக்கு எப்போது திருமணமானது என்றால் எனக்கு ஞாபகமில்லை. கௌசல்யாதேவிக்கு எப்போது திருமணமானது என்றால் 1999 ம் ஆண்டு நடந்தது.

3. கௌசல்யாதேவிக்கும் அவரது கணவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கௌசல்யாதேவி பிரிந்து வாழ்கிறார் என்றால் சரிதான். தாவாச் சொத்தில்

கௌசல்யாதேவியும் தனபாலும் வசித்து வருகிறார்கள் என்றால் தனபால் 6 ஆண்டுகளுக்கு முன்பு குடி வந்தார். என் அம்மா உயிருடன் இருந்தபோதே தனபால் அங்கு தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். தற்போதும் தனபால் தன் குடும்பத்துடன் தாவாச் சொத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

4. தாவாச் சொத்துக்கு அருகில் பாலசுப்பிரமணியம் இடம் வாங்கி வீடு கட்டி வசித்து வந்தார் என்றால் சரிதான். 21.06.2017ம் தேதி உயில் சாசனம் ஏற்பட்டபோது நான் பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த உயில் சாசனத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் வீட்டில் குடியிருப்பவர்கள் சென்றார்கள். அந்த உயில் ஆவணத்தை நான் படித்துக் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

5. என் அம்மா உயில் சாசனம் ஏற்பட்ட விவரத்தை எனக்கு எப்போது சொன்னார் என்றால் உயில் சாசனம் ஏற்படுவதற்கு முன்பு என்னிடம் வந்து கருத்து கேட்டார். பிறகு என் அம்மா என்னிடம் வந்து உயில் சாசனம் ஏற்பட்ட விவரத்தை சொன்னார். அப்போதும் நான் உயில் சாசனத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் என் அம்மா இறந்த பிறகு தான் உயில் சாசனம் பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

6. பொதுவாக இறப்பு ஏற்பட்டால் 3வது நாள், 11வது மற்றும் 16வது நாள் காரியங்கள் செய்வார்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் என் தாயார் இறந்த 4வது நாள் காரியத்தின்போது எனது நெருங்கிய உறவினர்கள் யாரார் இருந்தார்கள் என்று சொல்லி உள்ளேன் ஆனால் குறிப்பிட்டு அவர்களின் பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு 4வது காரியம் குறித்து எந்த நிகழ்வும் நடக்காததால் தான் உறவினர்களின் பெயர்கள் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. பாலசுப்பிரமணியம் உயில் சாசனத்தை படித்துக் காட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் உயில் சாசனம் நகல் என்னிடம் உள்ளதாக சொல்லவில்லை, அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். கௌசல்யாதேவி உயில் சாசனம் கொடுத்ததை வைத்து தான்  எனது முதல் விசாரணை விவரங்கள் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். என் அப்பா பெயரிலும், என் அம்மா பெயரில் தாவாச் சொத்தும் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் எல்லாம் எங்கள் 5 பேருக்கும் பாத்தியம் என்றால் என் அப்பா பெயரில் இருந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு தலா ஒரு பங்கு அளிக்கப்பட்டது என்றால் சரிதான்.

8. தாவாச் சொத்து என் அம்மாவும், கௌசல்யாவும் சம்பாதித்து வாங்கிய தனிப்பட்ட சொத்தாகும். பெரியார் காலனியில் இருந்த சொத்தை விற்பனை செய்து தான் தாவாச் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.  என் தாயாரும், கௌசல்யாவும் சேர்ந்து தாவாச் சொத்தை கிரயம் பெற்றதாக என் அம்மா பெயரில் உள்ள கிரய ஆவணத்தில் விவரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். உயில் சாசனத்தில் கௌசல்யாதேவி உடன் இருந்து சம்பாதித்து கிரயம் பெற்றதாகவும், அவருக்கும் தாவாச் சொத்தில் பங்கு இருப்பதாகவும் எந்த விவரமும்  சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

9. என் பெற்றோர் உயிருடன் இருந்த வரை மகன்கள் மற்றும் மகள்களுடன் நல்ல உறவில் இருந்தனர் என்றால் சரிதான். 5 மக்களையும் வேறுபாடின்றி சமமாக தான் பாவித்து வந்தனர் என்றால் சரிதான். கௌசல்யாதேவி தன் கணவரை விட்டு பிரிந்து வந்து என் அம்மாவுடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் தனபால், சிவானந்தகுமாருக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். தனபால், சிவானந்தகுமார், என் அம்மா, கௌசல்யாதேவி ஆகியோர் ஒன்றாக வசித்து வந்தனர் என்றால் சரியல்ல. மகன்கள் தனியாக வசித்து வந்தனர்.

10. தனபால், சிவானந்தகுமார் ஆகியோருக்கு திருமணமாகும் வரை என் அம்மா தான் குடும்பத் தலைவியாக இருந்து அவர்களை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. உயில் சாசனத்தில் மகன்கள் தன்னை விட்டு பிரிந்து தனியாக இருப்பதாக எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உயில் சாசனமும் மோசடியானது, என் தாயார் உயில் ஆவணத்தை ஏற்படுத்தவில்லை, நான் கௌசல்யாதேவிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. தாவாச் சொத்தில் தனபாலுக்கு பங்கு உள்ளது, அவர் தாவாச் சொத்தில் குடியிருந்து வருகிறார், தாவாச் சொத்தில் தனபால் வாடகைக்கு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா இருக்கும்போதே தனபால் வாடகை கொடுப்பதாக சொல்லி தான் தாவாச் சொத்தில் வசிக்க வந்தார். மேற்கண்ட விவரங்களை என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், வாடகை எவ்வளவு என்ற விவரமும் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அம்மாவுடனோ, கௌசல்யாவுடனோ தனபால் எந்த வாடகை ஒப்பந்தமும் ஏற்படுத்தவில்லை என்றாலும், மாணிக்கம்மாளின் மகன் என்ற உரிமையில் தான் தாவாச் சொத்தில் தனபால் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. கௌசல்யாவிடம் ஆதாயம் பெற்றுக் கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மேற்கண்ட சாட்சியத்தை 1 ம் பிரதிவாதி தனக்காகவும் ஏற்றுக் கொள்கிறார்)**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.03.04 22:31:54 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.